TET1MI/24

Don't write anything in this space

Booklet Serial No. :

Don't write anything in this space

| | | |
|---|---|---|
| தேர்வு | : | ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு-I (தொகுதி-I) பதவிக்கான முதன்மைத் தேர்வு |
| பாடம் | : | தமிழ்மொழி தகுதித் தேர்வு (பத்தாம் வகுப்புத் தரம்) (தாள் – I) (விரிந்துரைக்கும் வகை) |
| தேர்வு நாள் | : | 10.12.2024 மு.ப. |


| | | |
|---|---|---|
| தேர்வு | : | ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு-I (தொகுதி-I) பதவிக்கான முதன்மைத் தேர்வு |
| பாடம் | : | தமிழ்மொழி தகுதித் தேர்வு (பத்தாம் வகுப்புத் தரம்) (தாள் – I) (விரிந்துரைக்கும் வகை) |
| தேர்வு நாள் | : | 10.12.2024 மு.ப. |


பதிவு எண் :

விண்ணப்பதாரரின் கையொப்பம் மற்றும் தேதி

SEAL

**சான்று**

நான் இந்த வினா விடைத் தொகுப்பை விண்ணப்பதாரரின் பதிவு எண், புகைப்படம் மற்றும் கையொப்பம் ஆகியவற்றை நுழைவுச்சீட்டினில் சரிபார்த்த பின் வழங்கினேன்.

அறைக்கண்காணிப்பாளரின் கையொப்பம் மற்றும் தேதி

**சான்று**

(தேர்வு முடிவுற்றவுடன் கையொப்பமிட வேண்டும்)

நான் இந்த வினா விடைத் தொகுப்பில் பதிலளிக்காத விடைப் பகுதிகளை தேர்வு எழுதப் பயன்படுத்திய கருப்பு மை பேனா(மையூற்று பேனா அல்லது பந்துமுனை பேனா அல்லது ஜெல் பேனா)வினால் குறுக்குக் கோடிட்டுள்ளேன் என உறுதியளிக்கிறேன்.

விண்ணப்பதாரரின் கையொப்பம் மற்றும் தேதி

Do not write in this area
TNPSC - SPECIMEN

Do not use this area
TMPSC - SPECIMEN

# தாள் – I

# தமிழ்மொழி தகுதித் தேர்வு

## (விரிந்துரைக்கும் வகை)

## (பத்தாம் வகுப்புத் தரம்)

கால அளவு : மூன்று மணி நேரம் மொத்த மதிப்பெண்கள் : 100

(இவ்வினா-விடைத்தாள் தொகுப்பு 32 பக்கங்களைக் கொண்டுள்ளது)

**அறிவுரைகள்**

(கீழ்க்கண்ட அறிவுரைகளை தேர்வர்கள் தவறாமல் பின்பற்ற வேண்டும்)

1. தாள்-Iஇல் குறைந்தபட்ச தகுதி மதிப்பெண்கள் 40 பெற்றால் மட்டுமே பிறதாள்கள் மதிப்பீடு செய்யப்படும்.

2. தேர்வர்கள் இவ்வினா-விடைத்தாள் தொகுப்பு மொத்தம் 32 பக்கங்களைக் கொண்டுள்ளது என்பதை முதலில் உறுதி செய்து கொள்ள வேண்டும். வினா-விடைத்தாள் தொகுப்பில் ஏதேனும் குறைபாடு இருப்பின், தேர்வர் அதனை தேர்வு தொடங்குவதற்கு பத்து நிமிடங்களுக்கு முன்னதாக அறைக்கண்காணிப்பாளரிடம் தெரிவித்து. சரியாக உள்ள வேறொரு முழுமையான வினா-விடைத்தாள் தொகுப்பினை கட்டாயம் பெற்றுக்கொள்ள வேண்டும். தேர்வு தொடங்கிய பின்பு குறைபாடு குறித்து முறையிட்டால், மாற்றித் தரப்படமாட்டாது.

3. (i) தேர்வர்கள் ஒவ்வொரு வினாவிற்கும் விடை எழுதுவதற்கென வினா-விடைத்தாள் தொகுப்பில் ஒதுக்கப்பட்ட இடத்தில் மட்டுமே விடையளிக்க வேண்டும். விடையளிக்க ஒதுக்கப்பட்ட இடத்திற்கு வெளியே எதையும் எழுதக்கூடாது.

   (ii) தேர்வர்கள் வினாக்களுக்கு விடையளித்த பின்னர் மீதமுள்ள வெற்றிடங்களையும் விடையளிக்காத வினாவிற்கான வெற்றிடங்களையும் அனுமதிக்கப்பட்ட கருமை நிற மை பேனாவினால் குறுக்கு கோடிட்டு கண்டிப்பாக அடித்துவிட வேண்டும்.

4. தேர்வர்கள் இவ்வினா-விடைத்தாள் தொகுப்பில் ஒவ்வொரு பிரிவிலும் அறிவுறுத்தப்பட்டுள்ள எண்ணிக்கையிலான வினாக்களுக்கு மட்டுமே விடையளிக்க வேண்டும். அதற்கு மிகையான எண்ணிக்கையிலான வினாக்களுக்கு விடையளித்தால், ஒவ்வொரு பிரிவின் முடிவிலும் மிகையான எண்ணிக்கையில் விடையளிக்கப்பட்டவை கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது.

5. தேர்வர்கள் தங்களது பதிவு எண்ணை இவ்வினா-விடைத்தாள் தொகுப்பில் எந்த இடத்திலும் எழுதக்கூடாது. இந்த அறிவுரையை மீறும் தேர்வர்களின் விடைத்தாட்கள் செல்லாததாக்கப்படும்.

6. தேர்வர்கள் இவ்வினா-விடைத்தாள் தொகுப்பில் கையொப்பமிடுவதற்கென குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து இடங்களிலும் கையொப்பமிட வேண்டும். கையொப்பமிடாத தேர்வர்களின் விடைத்தாட்கள் செல்லாததாக்கப்படும்.

7. தேர்வர்கள் இந்த வினா-விடைத்தாள் தொகுப்பிலிருந்து எந்தத் தாளையும் கிழித்துவிடக் கூடாது.

8. இத்தேர்வைப் பொறுத்தவரை, அழகாக எழுதுவதற்காகத் தனியாக மதிப்பெண்கள் ஒதுக்கப்படவில்லை.

9. தேர்வர்கள் விடையளிக்கும் போது வினா எண்ணையும், அதன் உட்பிரிவையும் தவறாமல் குறிப்பிட வேண்டும்.

10. தேர்வர்கள் கடித வடிவிலான வினாக்களுக்கு விடையளிக்கும் பொழுது தங்களது பெயரையோ, பதிவெண்ணையோ எழுதக்கூடாது. தங்களது பெயரில் கையொப்பமிடவும் அனுமதியில்லை. அவ்வாறான வினாக்களுக்கு பதிலளிக்கும்பொழுது வினாக்களில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர் மற்றும் முகவரியையே பயன்படுத்த வேண்டும்.

    வினாக்களில் பெயர், முகவரி ஆகியவை குறிப்பிடப்படவில்லையெனில், ‘அனுப்புநர்’, ‘பெறுநர்’ முகவரிகளில் ‘அ ஆ இ’ அல்லது ‘எக்ஸ் ஒய் இசட்’ போன்ற பொதுப் பெயர்களை மட்டுமே எழுத வேண்டும்.

---

SPECIMEN

அலகு — 1 (அ)

*குறிப்பு :* i) கொடுக்கப்பட்ட தமிழ்ப் பகுதியை நன்கு படித்து கருத்துச் சிதையாமல் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கவும் :

**(1 × 10 = 10)**

| Q.No. | |
|---|---|
| 1 | சீட்டோ (SEATO) அல்லது மணிலா ஒப்பந்தம்.<br><br>தென்கிழக்கு ஆசிய ஒப்பந்த அமைவு என்பது தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டுப்பாதுகாப்பை முன்னிறுத்தியதாகும். மணிலா ஒப்பந்தம் (1954) அமெரிக்க ஐக்கியநாடு, பிரான்ஸ், இங்கிலாந்து, நியூசிலாந்து, ஆஸ்திரேலியா, பிலிப்பைன்ஸ், தாய்லாந்து மற்றும் பாகிஸ்தான் போன்ற நாடுகளால் கையெழுத்திடப்பட்டது. இவ்வொப்பந்தத்தின், உறுப்பு நாடுகள், இப்பகுதியில் பொதுவுடைமைச் சிந்தனை பரவுவதையும், அக்கொள்கை செல்வாக்குப் பெறுவதையும், தடுப்பதற்காக ஏற்படுத்தப்பட்டது. ஆனால் நேட்டோ கூட்டமைப்பில் இருந்தது போன்று நிரந்தரப் படைகளையோ ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டையோ சீட்டோ கொண்டிருக்கவில்லை. |

விடை

TNPSC - SPECIMEN

TNBSE : SPECIMEN

TNPSC - SPECIMEN

அலகு — 1 (ஆ)

*குறிப்பு :* ii) கொடுக்கப்பட்ட ஆங்கிலப் பகுதியை நன்கு படித்து கருத்துச் சிதையாமல் தமிழில் மொழிபெயர்க்கவும் :

**(1 × 10 = 10)**

| Q.No. 2 | Trees are very useful to us. They give us timber and firewood. The timber is used to make chairs, tables and other furniture. We get off oil from the oil seeds of some trees. The leaves and fruits of some trees are used to prepare medicines. |
|---|---|
| விடை | |

TNPSC : SPECIMEN

TNPSC - SPECIMEN

TNBSE - SPECIMEN

## அலகு — 2

*குறிப்பு :* i) கொடுக்கப்பட்ட பகுதியை அதன் அளவில் மூன்றில் ஒரு பங்கு அளவில் சுருக்கி உங்கள் சொந்த நடையில் எழுதுக. தலைப்பு தேவையில்லை.

**(1 × 10 = 10)**

| | |
|---|---|
| Q.No. 3 | மொழிபெயர்ப்பு, எல்லாக் காலகட்டங்களிலும் தேவையான ஒன்று. விடுதலைக்குப் பிறகு நாட்டின் பல பகுதிகளையும் ஒரே ஆட்சியின்கீழ் இணைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. தேசிய உணர்வு ஊட்டுவதற்கும் ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்கும் இந்திய அரசு, மொழி பெயர்ப்பை ஒரு கருவியாகக் கொண்டது. ஒரு மொழியில் இருக்கும் நூல்களைப் பிற மொழியில் மொழி பெயர்த்தது; பல்வேறு மாநிலங்களில் இருந்த இருக்கின்ற, எழுத்தாளர்கள், சிந்தனையாளர்கள் ஆகியோரைப் பற்றிய நூல்களையும் வெளியிட்டது. இத்தகைய மொழிபெயர்ப்பு முயற்சிகள் சாகித்திய அகாதெமி, தேசிய புத்தக நிறுவனம், தென்னிந்தியப் புத்தக நிறுவனம் ஆகியவற்றின் மூலம் செய்யப்பட்டன.<br><br>மொழிபெயர்ப்பைக் கல்வியாக்குவதன் மூலம் அனைத்துலக அறிவையும் நாம் எளிதாகப் பெற முடியும். பல அறிவுத் துறைகளுக்கும் தொழில் துறைகளுக்கும் வெளிநாட்டவரை எதிர்பார்க்காமல் நாமே நமக்கு வேண்டிய அனைத்தையும் உருவாக்கிக் கொள்ளமுடியும். மனித வளத்தை முழுமையாகப் பயன்படுத்த முடியும்; வேலைவாய்ப்புத் தளத்தை விரிவாக்க முடியும். நாடு, இன, மொழி எல்லைகள் கடந்து ஒருலகத் தன்மையைப் பெறமுடியும். நாடு விடுதலை பெற்ற பிறகு பல நாட்டுத் தூதரகங்கள் நம்நாட்டில் நிறுவப்பட்டன. அவை, தங்களுடைய இலக்கியம், பண்பாடு, தொழில் வளர்ச்சி, கலை போன்றவற்றை அறிமுகப்படுத்தும் நோக்கில் தத்தம் மொழிகளைக் கற்றுக் கொடுக்கின்ற முயற்சியை மேற்கொண்டு வருகின்றன. இதனைச் சார்ந்து பிற மொழிகளைக் கற்றுத்தரும் தனியார் நிறுவனங்களும் உருவாகின்றன. பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் பிற மொழிகளைக் கற்றுத்தரும் வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.<br><br>பிறமொழி இலக்கியங்களை அறிந்து கொள்ளவும் அவை போன்ற புதிய படைப்புகள் உருவாகவும் மொழிபெயர்ப்பு உதவுகிறது. இலக்கியம் என்பது தன் அனுபவத்தை எழுதுவது என்றாலும் அது கலைச்சிறப்புடையதாக இருக்கிறபோது அனைவரது அனுபவமாகவும் பொதுநிலை பெறுகிறது. அத்தகைய பொதுநிலை பெற்ற மொழி வேலி சிறையிடுகிறது. மொழி வேலியை அகற்றும் பணியை மொழிபெயர்ப்பு செய்கிறது. ஜெர்மன் மொழியில் மொழிபெயர்ப்பின் மூலம் அறிமுகம் ஆன ஷேக்ஸ்பியர், அந்நாட்டுப் படைப்பாளர் போலவே கொண்டாடப்பட்டார்.<br><br>18ஆம் நூற்றாண்டு வரை வடமொழி நூல்கள் பல தமிழில் ஆக்கப்பட்டன. ஆங்கிலேயர் வருகைக்குப்பின், ஆங்கில நூல்களும் ஆங்கில வழியாகப்பிற ஐரோப்பிய நூல்களும் அறிமுகமாயின. இவற்றில் தரமான நூல்கள் என்று பார்த்தால் சிலதான் எஞ்சும். இதே போலத் தமிழ்நூல்களும் பிறமொழிகளுக்கு அறிமுகமாயின. தமிழுக்குரிய நூலாக இருந்த திருக்குறள் உலக மொழிகளுக்குரியதாக மாறியது மொழிபெயர்ப்பால்தான். |

விடை

TNPSC SPECIMEN

TNPSC , SPECIMEN

அலகு — 3

*குறிப்பு :* i) கொடுக்கப்பட்டுள்ள பத்தியை நன்கு படித்து அதன் கீழ் கேட்கப்பட்டுள்ள ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ii) ஒவ்வொரு வினாவிற்கும் இரண்டு மதிப்பெண்கள்.

**(5 × 2 = 10)**

Q.No. 4

பொருள் உணர்திறன் :

'நாடும் மொழியும் நமதிரு கண்கள்' என்கிறார் மகாகவி பாரதியார். காலவெள்ளத்தில் கரைந்துபோன மொழிகளுக்கிடையில் நீந்தித் தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளது தமிழ். என்ன வளம் இல்லை என்று எண்ணி வியக்கத்தக்கவாறு பல்வேறு சிறப்பியல்புகளைக் கொண்டு இயங்குகிறது நம் செந்தமிழ் மொழி. அனைத்து வளமும் உண்டென்று விடை பகர்கிறது தமிழ்ச்சொல் வளம்.

சொல்வளம் இலக்கியச் செம்மொழிகளுக்கெல்லாம் பொதுவேனும், தமிழ்மட்டும் அதில் தலைசிறந்ததாகும்.

தமிழல்லாத திராவிட மொழிகளின் அகராதிகளை ஆராயும்போது, தமிழிலுள்ள ஒரு பொருட் பலசொல் வரிசைகள் அவற்றில் இல்லாக்குறை எந்தத் தமிழறிஞர்க்கும் மிகத் தெளிவாகத் தோன்றும்.

கொழுந்து வகை :

தாவரத்தின் நுனிப்பகுதிகளைக் குறிக்கும் சொற்கள்.

துளிர் அல்லது தளிர் : நெல், புல் முதலியவற்றின் கொழுந்து.

முறி அல்லது கொழுந்து : புளி, வேம்பு முதலியவற்றின் கொழுந்து.

குருத்து : சோளம், கம்பு, தென்னை, பனை முதலியவற்றின் கொழுந்து.

கொழுந்தாடை : கரும்பின் நுனிப்பகுதி.

பூவின் நிலைகள் :

பூவின் நிலைகளைக் குறிக்கும் சொற்கள்.

அரும்பு : பூவின் தோற்றநிலை.

போது : பூ விரியத் தொடங்கும் நிலை.

மலர் (அலர்) : பூவின் மலர்ந்த நிலை.

வீ : மரஞ்செடியினின்று பூ கீழே விழுந்த நிலை.

செம்மல் : பூ வாடின நிலை.

1. அனைத்து வளமும் உடைய மொழி எது?

**விடை**

TNPSC SPECIMEN

2. நாடும் மொழியும் நமதிரு கண்கள் என்றவர் யார்?

விடை

3. குருத்து என்பது எவற்றின் கொழுந்தைக் குறிக்கும்?

விடை

TNPSC - SPECIMEN

4. பூ விரியத் தொடங்கும் நிலை எவ்வாறு அழைக்கப்படுகிறது?

விடை

5. கரும்பின் நுனிப்பகுதி எவ்வாறு அழைக்கப்படுகிறது?

விடை

TNPSC - SPECIMEN

Do not use this area

அலகு — 4

*குறிப்பு :* i) கொடுக்கப்பட்டுள்ள சுருக்கக் குறிப்புக்களைக் கொண்டு விரிவாக எழுதுக.

ii) 300 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும். (1 × 10 = 10)

| | |
|---|---|
| Q.No. 5 | மரத்தின் பயன் – சுற்றுச்சூழல் பாதுக்காப்பு – பலவகை மரங்கள் வளர்த்தல் – மருத்துவம் – கால்நடை – கட்டுமானப்பொருள் – பள்ளிகளில் வளர்த்தல் – புவி வெப்பமயமாதல் – விழிப்புணர்வு ஏற்படுத்துதல். |

விடை

TNPSC - SPECIMEN

TNPSC - SPECIMEN

TNPSC - SPECIMEN

## அலகு — 5

குறிப்பு : i) திருக்குறள் தொடர்பான கட்டுரை வரைதல்.

ii) கொடுக்கப்பட்டுள்ள ஐந்து வினாக்களில் ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடையளிக்கவும்.

iii) 300 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

**(1 × 15 = 15)**

| Q.No. | |
|---|---|
| 6 | (அ) எதனையும் சாராத பொதுமையிலக்கியம் திருக்குறள் என்பதனை நிறுவுக. |
| | (ஆ) 'மனித வாழ்வுக்கு அன்பே அடிப்படை' என்பதைத் திருக்குறள் வழி விளக்குக. |
| | (இ) மக்கள் அனைவருக்கும் மனவலிமை வேண்டும் என்பதை வள்ளுவரின் ஊக்கமுடைமை எனும் அதிகாரத்தைக் கொண்டு விளக்குக. |
| | (ஈ) 'அடக்கமுடைமை' என்ற பொருண்மையில் வள்ளுவர் கூறும் மனித விழுமியங்கள் குறித்து ஒரு கட்டுரை வரைக. |
| | (உ) வாழ்வின் உண்மைகளை உணர்தல் எனும் நிலையினை வள்ளுவர் வழிநின்று விளக்குக. |

விடை

TNPSC - SPECIMEN

TNPSC - SPECIMEN

## அலகு — 6

குறிப்பு : i) கடிதம் வரைதல்

ii) கொடுக்கப்பட்ட மூன்று வினாக்களில் ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடையளிக்கவும்.

iii) **250** வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

**(1 × 15 = 15)**

| Q.No. | | |
|---|---|---|
| 7 | (அ) | 2023-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டு தெரிவு செய்யப்பட்ட சிறந்த நூல்களை எழுதிய நூலாசிரியர்களுக்கும், அவற்றைப் பதிப்பித்தப் பதிப்பகத்தாருக்கும் பரிசுத் தொகை வழங்கக் கோரி தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநருக்கு கடிதம் வரைக. |
| | (ஆ) | சாலை விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்காக அளிக்கப்படும் இன்னுயிர் காப்போம். “நம்மைக் காக்கும் 48 திட்டம்” சரிவர இயங்குகிறதா என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அறியும் வகையில் அறிக்கை ஒன்றைத் தயார் செய்க. |
| | (இ) | அனைத்துக் கல்லூரிகளிலும் ‘திருக்குறளில் வாழ்வியல்’ என்ற தலைப்பில் பேச்சுப் போட்டி நடத்துவதற்கான தமிழக அரசின் அறிக்கை ஒன்றினைத் தயார் செய்க. |

விடை

TNB32 - 8BE6NWE

TNPSC - SPECIMEN

TNPSC - SPECIMEN

# அலகு — 7

*குறிப்பு :* i) பின்வரும் ஐந்து பிரிவுகளில் ஒவ்வொரு பிரிவிலும் நான்கு வினாக்கள் உள்ளன.

ii) ஒவ்வொரு பிரிவிலும் உள்ள அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

iii) ஒவ்வொரு பிரிவிற்கும் நான்கு மதிப்பெண்கள்.

iv) ஐந்து பிரிவுகளுக்கும் சேர்த்து மொத்தம் இருபது மதிப்பெண்கள்.

**(5 × 4 = 20)**

| Q.No. 8 | கீழ்க்காணும் சொற்களை உமது சொந்த வாக்கியத்தில் எழுதுக. |
|---|---|
| | (1) நாளுக்கு நாள் |
| விடை | |
| | (2) மட மட |
| விடை | |
| | (3) கல கல |
| விடை | |
| | (4) சடு குடு |
| விடை | |

| Q.No. 9 | பின்வரும் இணைச் சொற்களைப் பயன்படுத்தி ஒரே தொடர் அமைக்க |
|---|---|
| | (1) வாடிவதங்கி |
| விடை | |
| | |
| | |
| | (2) பட்டிதொட்டி |
| விடை | |
| | |
| | |
| | (3) கல்விகேள்வி |
| விடை | |
| | |
| | |
| | (4) நட்டநடுவில் |
| விடை | |
| | |
| | |

| Q.No. 10 | பிரித்தெழுதுக. |
|---|---|
| | (1) ஒருலகம் |
| விடை | |
| | |
| | |
| | (2) ஒப்பனையுடையவள் |
| விடை | |
| | |
| | |

TNPSC - SPECIMEN

| | |
|---|---|
| | (3) இலங்குநூல் |
| விடை | |
| | |
| | |
| | (4) பொருத்தமற்றது |
| விடை | |
| | |
| | |
| Q.No. 11 | எதிர்மறை வாக்கியமாக மாற்றி எழுதுக. |
| | (1) கண்ணன் நேற்று வந்தான். |
| விடை | |
| | |
| | |
| | (2) தேனீர் சுவையாக இருந்தது. |
| விடை | |
| | |
| | |
| | (3) நான்தான் வேகமாக ஓடினேன். |
| விடை | |
| | |
| | |
| | (4) நானும் அவனும் சென்றோம். |
| விடை | |
| | |
| | |

TNPSC - SPECIMEN

| Q.No. 12 | பிழை நீக்கி எழுதுக : |
|---|---|
| | (1) அவர் விட்டு சென்ற பணியைத் தொடர்வேன். |
| விடை | |
| | |
| | |
| | (2) அச் செயலைப் புரிந்தது அவன் அல்ல. |
| விடை | |
| | |
| | |
| | (3) திருவளர்ச் செல்வன் மகிழ்நன் திருமணம் இனிதே நடைபெற்றது. |
| விடை | |
| | |
| | |
| | (4) அண்ணப் பறவை அளகினைத் திறந்தது. |
| விடை | |
| | |
| | |

TNPSC . SPECIMEN

Do not use this area

குறிப்புகள் எழுதி பார்ப்பதற்கான இடம்

TNPSC - SPECIMEN

குறிப்புகள் எழுதி பார்ப்பதற்கான இடம்

TNPSC - SPECIMEN

குறிப்புகள் எழுதி பார்ப்பதற்கான இடம்

TNPSC - SPECIMEN

குறிப்புகள் எழுதி பார்ப்பதற்கான இடம்

SEAL

TNPSC - SPECIMEN